புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • மே 29, 2025 • புரட்சி 25 • முழக்கம் 20 • விலை ரூ.6.00

# கடவுள் இல்லை; மதம் இல்லை; ஜாதி இல்லை!






# பெண்களின் "நாத்திகப் பேரணி"

கருப்பு உடை தரித்து பெரியாரியப் பெண்கள் தீச்சட்டிகளுடன் அலகுகுத்திக் கொண்டும் கடவுள் இல்லை என்றும் பேரணியாக அணிவகுத்த காட்சியை கொளத்தூர் கண்டது. "நாங்கள் பெரியாரியப் பெண்கள்; எங்களுக்கு கடவுள் இல்லை, மதம் இல்லை, ஜாதி இல்லை, தோழியர்களே! இந்த நம்பிக்கைகள் தான் நம்மை அடிமையில் ஆழ்த்துகின்றன" என்ற செய்தியை மக்களுக்கு கூறினார்கள்.

மேட்டூர் வட்டத்தின் ஒரு சின்னஞ்சிறு கிராமம் கொளத்தூர். அந்த ஊரைச் சார்ந்த திராவிடர் விடுதலைக் கழக மகளிர் அணியினர் ஒரு புரட்சிகர முடிவை எடுத்தனர். நாத்திகர் விழா நடத்துவது என்று அறிவித்து களம் இறங்கினர். கழகத் தலைமைக்கு அந்த முடிவை தெரிவித்தனர்.

பெண்களே நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தனர். பெண்களே பொதுமக்களிடம் நிதி திரட்டினார்கள். கடவுள், மதத்தை எதிர்த்து இப்படி பெண்கள் களத்தில் இறங்கி செயல்பட்டு பேரணியையும் விழாவையும் நடத்தி அதை வெற்றியாக்கி சாதனை படைத்துள்ளனர்.

தமிழ்நாடு முழுதும் இருந்து கழகத் தோழர்கள் பெண்களும் ஆண்களுமாக கொளத்தூர் நோக்கி திரண்டனர். கரைபுரண்டது உற்சாகம். " இப்படி துளியும் கூட பயமின்றி கடவுள் மதத்தை எதிர்க்கிறார்களே" என்று பொதுமக்கள் வியப்புடன் பார்த்தனர். ஆனாலும் அவர்களின் கடவுள் சிந்தனையை இந்த பேரணி அசைத்திருக்கும் என்பதை நாம் உறுதியாக கூற முடியும்.

கடவுளை மறுத்து பெண்கள் தீச்சட்டி ஏந்துவதையும், வாயில் அலகு குத்துவதையும் பார்க்கும்போது கடவுள் அச்சத்தின் பிடி பொதுமக்கள் உள்ளத்தில் நிச்சயம் தளரவே செய்யும்.

இப்படி நாத்திகப் பேரணியை கண்டு ஏராளமான தோழர்கள் பெரியார் கொள்கைக்கு வந்துள்ளதை வரலாறு கூறுகிறது.

உலகில் நாத்திகர் எண்ணிக்கையில் பெண்கள் மிக மிக குறைவாகவே இடம்பெற்றுள்ளனர். கூகுள், சாட்ஜிபிடி போன்ற தகவல் தரும் ஊடகங்களில் தேடிய போது விரல்விட்டு எண்ணக்கூடிய 9 பெயர்கள் மட்டுமே வந்தன. ஆனால் பெரியார் இயக்கத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் நாத்திகர்களாக மட்டுமல்லாமல் நாத்திக பரப்புரைக்கும் தயாராகி மக்களிடம் தங்களை வருத்திக் கொண்டு மூட நம்பிக்கைகளைத் தோலுரிக்கவும் முன்வந்துள்ளனர். கொளத்தூர் பெண்கள் நடத்திய நாத்திகப் பேரணி உலக வரலாற்றில் முதன்மையானது என்று நாம் என்று நெஞ்சை நிமிர்த்திக் கூறலாம். கழகத்திற்கு பெருமை சேர்த்து விட்டனர் நமது பெண் தோழர்கள். பொதுகூட்டம் என்ற அறிவிப்பை மாநாடாக மாற்றிவிட்டார்கள்.

**–வாழ்த்துகள் தோழியர்களே!**

# கொளத்தூர் குலுங்கியது

●சேலம் மாவட்டம் மகளிர் அணி சார்பில் 24.05.2025 அன்று நாத்திகர் விழா அதை ஒட்டி அறிவியல் மனப்பான்மையை வளர்ப்போம்! மூடநம்பிக்கைகளை ஒழிப்போம் என்கிற முழக்கத்தோடு ●மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி மற்றும் நாத்திகர் விழா நடைபெற்றது.



●தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்து பெண்கள், குழந்தைகள், தோழர்கள் மட்டும் தனி வாகனத்தில் மாநாட்டுக்கு வந்தனர். பெண்கள் மட்டுமே சுமார் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கர்ப்பிணிப் பெண்களும், கைக்குழந்தைகளுடனும் பெண்கள் பங்கேற்றனர். குழந்தை பிறந்து 20 நாட்களே ஆன கிருத்திகா அலகு குத்தி பேரணியில் பங்கேற்றார்.

●உக்கம்பருத்திக்காடு சு. கோமதி, காவலாண்டியூர் க.கலைச்செல்வி, கொளத்தூர் அழகேஸ்வரி, உக்கம் பருத்திக்காடு கு.லதா, மாதம்மாள் ஆகியோர் பேரணியை ஒருங்கிணைத்தனர்.

●சேலம் (கொளத்தூர், காவலாண்டியூர், மேட்டூர், மேட்டூர் ஆர்எஸ், மேச்சேரி, நங்கவள்ளி, கொங்கணாபுரம், ஏற்காடு, ஆத்தூர்) போன்ற பகுதிகளில் இருந்தும் ஈரோடு வடக்கு, தெற்கு, திருப்பூர், கோவை, நாமக்கல், திருச்சி, பொள்ளாச்சி, மடத்துக்குளம், சென்னை, மதுரை, தஞ்சாவூர், தென்காசி, தூத்துக்குடி, வேலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து தோழர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

●புதுச்சேரி சிந்தனையாளர் இயக்கம் தீனா, பெங்களூர் தோழர்கள் சித்தார்த், மணிமொழி, பெங்களூரு நாகரத்னா, சபானா, பாபு, விஜய், ஜார்ஜ் – (Educate and Organize), தெலுங்கானா (பைரி நரேஷ் (MNS) மூட நம்பிக்கை நிர்மூல சங்கம்), உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் தோழர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

●மாநாட்டுக்கு நீதிமன்றத்தில் வாதாடி அனுமதி பெற்றுத் தந்த வழக்குரைஞர் திருமூர்த்தி மற்றும் அவரது சக வழக்கறிஞர்களுடன் பங்கேற்றார்.

●மாலை 4 மணியளவில் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி மு.கீதா தலைமையில் நடைபெற்றது. காயத்ரி பேரணியை தொடங்கி வைத்தார். பேரணியில் தீச்சட்டி எடுத்தல், அலகு குத்துதல், பறவைக்காவடி, கார் இழுத்தல், ஆணிப்படுக்கை, கண்ணாடி சில்லுகள் மேல் நடப்பது, நெருப்பு கக்குவது, மண்டைக் கட்டு போன்ற பல்வேறு மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்வுகளை செய்து இவைகளை கடவுள் உருவாக்கியதா? என்று முழக்கமிட்டனர். கடவுள், மதம், பெண்ணடிமை, ஜாதிக்கு எதிரான பதாகைகளை கையில் ஏந்தி நடந்து சென்றனர்.





●வழிநெடுக கடவுள் மறுப்பு, அறிவியல் பூர்வமான கேள்விகளை முன்வைத்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் பேரணியை கண்டுகளித்தனர். மேலும் பலர் காணொளி எடுத்தனர்.

●மேடை நிகழ்வாக பெரியார் பிஞ்சுகள் திராவிட மகிழ்நன், யாழினி பாடல்களை பாடினார்கள். ஆசிரியர் சிவகாமி, கொளத்தூர் கனலி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். காஞ்சி மக்கள் மன்றத்தின் புரட்சிகர கலைநிகழ்ச்சிகள் மற்றும் மேடை நாடகங்கள் உணர்ச்சியூட்டின. பெங்களூர் சிறுவர்கள் மூடநம்பிக்கை ஒழிப்புப் பாடலுக்கு சிறப்பாக நடனமாடினர்.

●மேடையில் மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்வுகளை இரண்யா, சரிதா, யாழிசை, தேன் மொழி (கண்ணாடிச் சில்லுகள் மேல் நின்று தன் 4 வயது மகளுடன்) செய்து காட்டினார்கள்.

●தேன்மொழி-ஆனந்தி இணைந்து மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சியை நடத்தினர். தமிழ்நாட்டில் பெண்களே இந்த அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்துவது இது ஒரு முன்மாதிரி. குறுகிய காலத்தில் நாத்திகர் விழாவுக்காக மந்திரமா? தந்திரமா கலையை கற்றுக் கொண்டனர். பெரம்பலூர் தாமோதரன் இந்த கலையை பெண்களுக்கு பயிற்றுவித்தார். சிற்பி இராசன் நிகழ்வில் கலந்து கொண்டார்.

●சுதா(சேலம் மாவட்ட மகளிர் அணி தலைவர்) தலைமையில் விழா நிகழ்ச்சிகள் துவங்கின. ரா.சரஸ்வதி (சேலம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்), ரா.ஆனந்தி (சேலம் மாநகர செயலாளர்), இந்திராணி (நங்கவள்ளி திவிக), ஜாஸ்மின் ஸ்ரீ (சேலம் மாவட்ட அமைப்பாளர்), அ.ச.அறிவுமதி (தமிழ்நாடு மாணவர் கழகம்) முன்னிலை வகித்தனர்.

●காயத்ரி வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி தொடக்கவுரையாற்றினர்.

●ஏற்காடு சரிதா, காஞ்சி மக்கள் மன்றத்தின் ஜெசி, பேராசிரியர் சுந்தரவள்ளி (தமுஎகச), கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

●கோவை சாந்தகுமார் தோழர்களுக்கு அழகுகளை குத்தினார்.

●கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். சே.கோமதி நன்றி கூறினார்.

●கடந்த மார்ச் 30-ம் நாள் ஏற்காட்டில் நடைபெற்ற மகளிர் ஒன்றுகூடல் கலந்துரையாடல் கூட்டத்தில் நாத்திகர் விழாவை பெண்களே நடத்துவது என்று முடிவு செய்யபட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த இரண்டு மாதங்களாக திருப்பூர், சேலம் பெண்கள் கடைவீதி வசூல், தனிநபர் வசூல் பணிகளையும், கொடி கட்டுவது, தீச்சட்டி வண்ணம் பூசுவது போன்ற மாநாட்டு ஏற்பாட்டு வேலைகளையும் பெண்களே முன்னின்று செய்தனர். சுதா, சரஸ்வதி, சிவகாமி ஒருங்கிணைப்பு பணிகளையும், அனைத்து மாவட்ட பெண் தோழர்களையும் அழைத்துப் பேசி அவர்களை திரளாகப் பங்கேற்கச் செய்தனர்.

●மாநாட்டில் கிருத்திகா- தமிழ்செல்வன் இணையரின் பெண் குழந்தைக்கு கழகத் தலைவர் குயிலி எனப் பெயர் சூட்டினார்.

●சேலம் மாவட்டத் தோழர்கள், பொறுப்பாளர்கள் ஒத்துழைப்புடன், மாநில நிர்வாகிகள் வழிகாட்டுதலுடன் மாநாடு நடைபெற்றது. கழகத்தின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

●சென்னை கழகத் தோழர்கள் அருண், சூர்யா , குமார், எழில், அருண் (ஆட்டோ) ஆகியோர் இரண்டு நாட்களுக்கு முன்பே கொளத்தூர் வந்து மேடை வடிவமைப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

●கழகத்தை சார்ந்த கொளத்தூர் கபிலன் ஸ்டுடியோ குழுவினரான விஜி, இளவரசன், கபிலன், வளவன் ஆகியோர் படங்கள் மற்றும் காணொளிகளை படமாக்கினர்.

●பேரணி காட்சிகளை உடனடியாக எடிட் செய்து நிகழ்ச்சியிலேயே காணொளியை ஒளிப்பரப்பினார் கபிலன் ஸ்டுடியோ இளவரசன்.

●பெரியார் முழக்க சந்தாவாக காவலாண்டியூர் பகுதிச் சார்பாக ஈஸ்வரன் (தலைமைக் குழு உறுப்பினர்) ரூபாய் 43,500 வழங்கினார்.

●நாத்திக ஜோதி (ஈரோடு வடக்கு மாவட்ட கழகத் தலைவர்) ரூபாய் 7,500 பெரியார் முழக்க சந்தாவாக வழங்கினார்.

●ஆசிரியர்கள் செல்வேந்திரன், வெங்கடேஷ், சரவணன் ஆகியோர் நாத்திகர் விழாவில் பங்கேற்ற தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடுகளை செய்தனர்.

**–நமது செய்தியாளர்கள்.**

# நீதிபதிகளே மூடநம்பிக்கைகளைப் பரப்புகிறார்கள் நாத்திகர் விழாவில் தோழர்கள் உரை

விழாவில் நிறைவுரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி கடவுள் நம்பிக்கை குறித்து பெரியாரின் கருத்துக்களை எடுத்துக்காட்டினார். அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது: வேதத்தை முன்வைத்து வேதத்தின் வழிவந்த வந்த மனு சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்டு இருக்கிற இந்த ஜாதிய சமுதாயத்தில், ஜாதியை உறுதியாக கட்டிக்காக்கும் ஆணாதிக்கம் (அ) பெண்ணடிமைத்தனம் இவற்றின் மீது கைவைத்து பெரியார் சாஸ்திரங்கள், புராணங்கள், மனு சாஸ்திரங்கள் உட்பட எல்லாவற்றையும் எரித்தார். புரட்சியாளர் அம்பேத்கரும் இவைகளை எரித்தார்.

சாஸ்திரங்களின் அதிகாரங்களை தகர்க்க வேண்டும் (Authority of Shastras) அதுதான் ஜாதியை ஒழிக்க வழி என்று அம்பேத்கர் சொன்னார். கடவுளை எப்படி சமூகம் வைத்திருக்கிறது என்பதை பெரியார் சொல்கிறார்:

கடவுள் என்பது ஒரு விளையாட்டு சாமான். சொர்க்கம், மோட்சம் என்பது ஒரு தின்பண்டங்கள் ஆகும். நரகம் என்பது ஒரு பூச்சாண்டி குழந்தைகளைத் பொறுத்த வரையில் இளம் குழந்தைகள் மூத்திரத்தை மண்ணில் பிசைந்து, கொட்டாங்குச்சியில் இட்லி சுடுவது போல் இதைத் தான் இந்த வயது வந்த தடியர்கள் கடவுள் பெயரால் கடவுளுக்கு திருமணம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று கூறியதோடு பல வரலாற்றுத் தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

### சுந்தரவள்ளி

உலகிலேயே பெண்கள் நடத்தும் முதல் நாத்திக விழா என்று பேராசிரியர் சுந்தரவள்ளி தனது உரையில் கூறினார். அவரது உரையிலிருந்து....
உலகத்திலேயே பெண்கள் தலைமையில் நடந்த நாத்திக விழா என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்து இருக்கிறோம்.

மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்வுகளை தோழர்கள் பெரும் உற்சாகத்தோடு, கடவுள் இல்லை என்ற முழக்கத்தோடு ஊர்வலம் வந்தனர். தமிழ்நாட்டில் தற்போது வலதுசாரிகள் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கிய இந்த வேளையில் ஆர்.எஸ்.எஸ் (ஆளுநர்) ரவி சனாதன பூமி என்று பேசி வந்த நிலையில், அதற்கு பதிலடியாகப் சேலம் கொளத்தூரில் இந்த பெண்கள் ஒரு பகுத்தறிவு படையை இந்த நாத்திகர் விழாவை திரட்டி இருக்கிறார்கள்.



மூடநம்பிக்கைகளை ஒழிக்கும் விழாவை ஏன் பெண்கள் நடத்தவேண்டும்? ஏனென்றால் பார்ப்பனியம் பெண்கள் வழியாகத் தான் மூடநம்பிக்கைகளை சடங்குகள் என்ற போர்வையில் கடத்துகிறார்கள். ஆரியப் பார்ப்பனியம் கடுமையான பல நவீன வடிவங்களில் மூடநம்பிக்கைகளுக்கு வலுசேர்க்கிற சடங்குகளை திணிக்கிறது.

கரூரில் பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் சூத்திரர்கள் உருள்வது என்ற சடங்கை இன்னமும் காப்பாற்றத் துடிக்கிறார்கள். பார்ப்பன நீதிபதி ஜிஆர் சுவாமிநாதன் எச்சில் இலையில் உருள்வது இந்து தர்மம் என்று பேசுகிறார். யாருக்கு அது தர்மமாக தெரிகிறதோ அவர்கள் அதில் உருண்டு, புரண்டு பிரார்த்தனை செய்யட்டும்.

பார்ப்பனர்கள் எப்போதும் இதுபோல சடங்கு சம்பிரதாயங்களை பின்பற்றுவது கிடையாது. பார்ப்பான் காவடி தூக்க மாட்டான், அலகு குத்த மாட்டான், பறவைகாவடியில் தொங்க மாட்டான், பார்ப்பான் தீ மிதிக்க மாட்டான். பார்ப்பனர்களுக்கு அடியாட்கள் வேலை செய்யும் சூத்திரர்களை இதுபோன்ற சடங்குகள் வழியாக மூளைச்சலவை செய்து வைப்பார்கள் என்றார் சுந்தரவள்ளி.

# நாத்திகர் விழா காட்சிகள்



































date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் தமிழ்நாடு அரசுக்கு நாத்திகர் விழா கோரிக்கை

*கொளத்தூரில் மே24-ல் நடந்த நாத்திகர் விழாவில் **நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:***

***முன்மொழிந்தவர்: ஈரோடு மணிமேகலை***

***தீர்மானம்-1:*** *சமூகத்தில் அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும். சாமியார்களின் அதீத சக்திகளை மக்கள் நம்பி ஏமாறுகிறார்கள். அந்த மக்களின் நம்பிக்கைகளை வாய்ப்பு ஆக்கிக் கொண்டு சாமியார்கள் பெண்களின் நகைகளைப் பறிப்பது, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது போன்ற குற்ற செயல்கள் அன்றாடம் நடந்து கொண்டிருக்கின்றன. அனைத்து தொலைக்காட்சிகளும் ஒவ்வொரு நாளும் இந்த குற்ற செயல்களை நிகழ்ச்சிகளாக ஒளிப்பரப்பி வருகின்றன.*

*பேய்,பில்லி, சூனியம், பரிகாரம், தாயத்து போன்ற பல்வேறு வடிவங்களில் இந்த மோசடிகள் நடைபெறுகின்றன. அறிவியல் மனப்பான்மையை குடிமக்களிடையே உருவாக்க வேண்டும் என்று இந்திய அரசியல்சட்டப் பிரிவு (51 (A) (h) கூறுகிறது.*

*இந்த மூடநம்பிக்கைகளுக்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் நோக்கத்தோடு பல்வேறு இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த இயக்கங்களுக்கு பல்வேறு நிலைகளில் அரசு ஆதரவு தந்து ஊக்குவிக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்வதோடு, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதைப் போல தமிழ்நாட்டிலும் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் ஒன்றை இயற்ற வேண்டும் என்று நாத்திகர் விழா வலியுறுத்துகிறது.*

***அறிவியல் பாடம்***

***முன்மொழிந்தவர்: தனுஷ்யா***

***தீர்மானம்-2:*** *பள்ளி, கல்லூரிகளில் அறிவியல் கருத்துக்களை மட்டுமே கற்பிக்க வேண்டும் என்கிற முதலமைச்சரின் அறிவிப்பைப் பாராட்டி வரவேற்கிறோம். அதே நேரத்தில் பேய், பிசாசு, பில்லி, சூனியம்,ஜோதிடம், ஜாதகம், பரிகார பூஜைகள் செய்தல் போன்றவற்றின் பெயரால் பெண்கள், குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் குறித்த விழிப்புணர்வை அரசு மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.*

*பள்ளிப் பாடப் புத்தகங்களிலேயே மேற்கண்டவை அறிவியலுக்கு புறம்பானவை என்றும் அவற்றை நம்பாமல் அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற வகையில் பாடத்திட்டங்களை உருவாக்கி குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும் என்று நாத்திகர் விழா வலியுறுத்துகிறது.*

***சடங்குகள் வேண்டாம்***

***முன்மொழிந்தவர்: பாரதி***

***தீர்மானம்-3:*** *சமூகத்தில் பெண்களுக்கு எதிரான பல்வேறு கொடுமைகளும், பாகுபாடுகளும் காலப்போக்கில் ஒழிக்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் இன்றைக்கு வரையிலும் கணவன் இறந்தால் மனைவிக்கு நிகழ்த்தப்படுகிற தாலி அறுப்பு என்கிற சடங்கு பெரும்பாலான குடும்பங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது.*

*கணவனின் இழப்பை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு வெளிவருவதற்குக் கூட அவகாசம் இல்லாத வகையில் கணவன் உடல் இருக்கும்போதே பெண்ணுக்கு பட்டுப் புடவை உடுத்தி, பூ அணிவித்து, புது வளையல்கள் போட்டு மணப்பெண் போல அலங்கரித்து, பின் அவற்றையெல்லாம் உடைப்பது, அகற்றுவது என்கிற சடங்கு பெண்ணின் தனி மனித உணர்வைப் புண்படுத்துவதாகவும் பெண்களின் மாண்பிற்கு எதிரானதாகவும் இருக்கிறது. எனவே அந்தச் சடங்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று பொது சமூகத்தை நாத்திகர் விழா கேட்டுக்கொள்கிறது.*

## “நாத்திக வாழ்க்கை நோக்கி வாருங்கள்”

*நாத்திக வாழ்வியல் ஏற்று உன்னதமான லட்சிய வாழ்க்கையை நோக்கி வருமாறு மக்களுக்கு நாத்திகர் விழா வேண்டுகோள் விடுத்தது. இது குறித்து **நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:***

***முன்மொழிந்தவர்: இரண்யா***

***தீர்மானம்-4:*** *கடவுள், மத நம்பிக்கை இல்லாமல் மானுடத்தையும் அதன் வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டதே நாத்திக வாழ்வியல் நெறி. சமத்துவம் மற்றும் அறிவியலை இலக்காகக் கொண்டு ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூக சமத்துவத்தை நோக்கியது.*

*இதில் பார்ப்பனிய கருத்தியல்களான ஜாதியத்துக்கோ, பெண்ணடிமைக்கோ, மூடநம்பிக்கைக்கோ இடமில்லை. வேத காலத்திலேயே கடவுள் மறுப்பு சிந்தனைகள் தொடங்கிவிட்டன.*

*உலகம் முழுவதும் கடவுள் மத கற்பனைகளை ஏற்காத நாத்திகர்கள் வாழ்கிறார்கள். கடவுள் மத நம்பிக்கை இல்லாத அதிக மக்களைக் கொண்ட நாடு பின்லாந்து. உலகிலேயே மகிழ்ச்சியாக வாழும் நாடு பின்லாந்து தான் என்று ஆய்வுகள் கூறுகின்றன.*

*எப்படி கடவுள் மத நம்பிக்கைக்கும், அதனை பரப்புவதற்கும் உரிமை வழங்குகிறதே அதனை போல கடவுள் மத நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் மனசாட்சி உரிமை என்ற அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் (பிரிவு 25) உரிமை வழங்கி உள்ளது: பல உயர்நீதிமன்ற தீர்ப்புகளும் இந்த உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளன.*

*சொல்லப்போனால் ஒவ்வொரு மதமும் பிற மதங்களின் கடவுள்களை மறுக்கிறது. நவீன சமூக வாழ்க்கையில் ஒவ்வொரு முன்னேற்றமும் மருத்துவ, விஞ்ஞானத்தின் மகத்தான வளர்ச்சியும் கடவுள் பெயரால் கட்டமைக்கப்பட்ட நம்பிக்கைக்களைப் புறந்தள்ளியே வருகிறது என்பதே எதார்த்தம்.*

*கடவுள் மத நம்பிக்கையாளர்களும் கடவுள் மதத்தை விலக்கி வைக்கும் இந்த வாழ்க்கை முறையை ஏற்றுத்தான் வாழ்கிறார்கள். நாத்திகம் என்பது மதவாதிகள் பரப்புவதைப் போல எதிர்மறையானது அல்ல. அது ஆக்கபூர்வமான அறிவியல் வாழ்வு.*

*பெரியார் நாத்திகத்தை சமூக விடுதலையுடன் இணைத்தார். மானமும் அறிவும் நிறைந்த வாழ்க்கைக்கு நாத்திக நெறிமுறையை பெரியார் முன்மொழிந்தார். எனவே நாத்திகத்தை கொள்கையாகவும் வாழ்க்கையாகவும் ஏற்று உன்னதமான இலட்சிய வாழ்க்கையை நோக்கி வருமாறு இந்த நாத்திகர் விழா நாட்டு மக்களை அறைகூவி அழைக்கிறது.*

*குறிப்பாக பெண்கள் நாத்திக வாழ்க்கையை ஏற்று வாழும் போதுதான் சமூக மாற்றத்தை பாய்ச்சலாக்கி முன் நகர்த்தும் என்று இந்த நாத்திகர் விழா சுட்டிக் காட்டுகிறது.*

*(இரண்டாம் பக்கம் தொடருச்சி...)*

### ஜெசி



*மூடநம்பிக்கைகளை நீதிபதிகளே பரப்புப்கிறார்கள் என்று காஞ்சி மக்கள் மன்றம் தோழர் ஜெசி கூறிப்பிட்டார். அவரது உரையிலிருந்து...*

*இன்றைக்கு பல்வேறு மூடநம்பிக்கை கருத்துக்களை சாமியார்கள் பேசுவதைவிட நீதிபதிகள், அமைச்சர்கள் இப்போது தீவிரமாக பேசி வருகிறார்கள். ஒரு நீதிபதி பேசுகிறார் "பசு ஆக்சிஜனை உள்ளிழுத்து ஆக்சிஜனையே வெளியேற்றம் செய்கிறது.*

*சாமியார்களிலே வித்தியாசமான சாமியார் நித்தியானந்தா தான். அவர் பேச்சுத் தொணி கொஞ்சம் சுவாரஸ்யமாக இருக்கும். நித்தியானந்தா ஒரு (cosmic Airport)பிரபஞ்ச விமான நிலையத்தை உருவாக்கி இருக்கிறார்.*

*கருவுறும் பெண்கள் எல்லோரும் வாருங்கள். இந்த பிரபஞ்ச விமான நிலையத்தில் உங்கள் குழந்தைகளை பெற்றுக் கொள்ளுங்கள். என்னுடைய இடத்தில் வந்து குழந்தை பெற்றுக் கொண்டால் பிறக்கும் போது ஞானம் பெற்றிருப்பார்கள். நான் அதற்குரிய (DNA) மரபணுக்களை மாற்றிவிடுவேன் ஆகையால் இங்கே வாருங்கள் என்று நித்தியானந்தா அழைக்கிறார்.*

*ஒரு ராஜஸ்தான் நீதிபதி பேசியது: ஆண் மயில்கள் பிரம்மச்சாரிகளாம். பெண்மயில்ளோடு உடலுறவு வைத்துக் கொள்வதில்லை. ஆண்மயில்களின் கண்ணீரை குடித்துத் தான் பெண்மயில்கள் கருவுறுகிறது என்று பேசி இருக்கிறார். பசுமூத்திரத்தில் தங்கம் இருக்கிறது, வெயில் காலங்களில் கிடைக்கும் பசுமூத்திரங்களில் தங்கம் அதிகம் கிடைக்கிறது. குளிர் காலங்களில் கொஞ்சம் குறைவுதான். இப்படி பல அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கைகள் வளர்க்கும் கருத்தியலை அறிவியல் என்ற பெயரிலே நீதிபதிகளே பேசுகிறார்களே.*

*நிறைய சாமியார்கள் பேசுகிறார்கள், இவற்றில் எதை உண்மை என்று நாங்கள் ஏற்றுக்கொள்வது என்று ஒரு ஆசானிடம் போய் கேட்கிறார்கள். ஆசானின் பதில் "மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது என்பதனால் நம்பாதீர்கள், பிரபலமாக இருக்கிறது என்பதனால் நம்பாதீர்கள், உங்கள் புனித நூல்களில் இருக்கிறது என்பதனால் அதை நம்பாதீர்கள், நீங்கள் மதிப்பு வைத்திருக்கும் தலைவர் பேசுகிறார் என்பதனால் நம்பாதீர்கள், நீங்கள் வியக்கும் தலைவர் பேசுகிறார் என்றால் நம்பாதீர்கள், ஏன் நானே சொன்னாலும் நம்பாதீர்கள், உங்களது பொது புத்திக்கு (common sense) இயல்பான அறிவுக்கு சரி என்று சொன்னாலும் நம்பாதீர்கள், தர்க்கரீதியாக உங்களுக்கு அது உண்மை என்று தோன்றினாலும் நம்பாதீர்கள் என்றார் அந்த ஆசான். அந்த ஆசான் தான் புத்தர். புத்தருக்கு பிறகு பெரியார் வந்தார். உங்கள் அறிவைக் கொண்டு சிந்தியுங்கள் என்று மக்களைச் சிந்திக்க செய்தார்.*

### ஆசிரியர் சிவகாமி

*எதற்காக இந்த நாத்திகர் விழா? சில ஆண்டுகளாக தொடர்ந்து மக்கள் விரோத செயல்களுக்கு எதிராக இயக்கங்கள் எதிர்வினையாற்ற ஆட்சி எதிர்வினை ஆற்றி போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்று நடத்திக் கொண்டிருப்பதால் கடந்த சில வருடங்களாக பகுத்தறிவு நிகழ்ச்சிகளை, கடவுள் மறுப்பைப் பிரச்சாரம் செய்வதில் தொய்வு இருந்தது. இந்திய சமூகம் ஜாதிகளால் கட்டமைக்கப்பட்டது ஜாதி பெண்ணடிமைத்தனத்தை உருவாக்கி காப்பாற்றி வைத்திருக்கிறது மதங்கள் ஜாதியையும் பெண்ணடிமை தனத்தையும் காப்பாற்றுகின்றன.*



*இந்த பார்ப்பன வேத மதமான இந்து மதம் கடவுளை மனம் உருகி வழிபடுவதை விடவும் சடங்குகளுக்கே முக்கியத்துவம் தரும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. அன்றாடம் வீட்டில் நடக்கும் சிறு சிறு நிகழ்வுகளில் இருந்து சமூகத்தில் நடக்கும் பெரிய விழாக்கள் வரை சடங்குகள் செய்வதன் மூலமே மதங்கள் நிலை நிறுத்தப்படுகின்றன. சடங்குகளால் தான் கடவுள் உயிர் வாழ்கிறார்.*

*அம்பேத்கர் கூட ஒழுக்கத்திற்கு இடம் தராத, பகுத்தறிவுக்கு இடம் தராத சடங்குகளை ஒழிக்க வேண்டியது அவசியம் என்று சொல்கிறார்.*

*தந்தை பெரியாரும் பெண்கள் கல்வி கற்பதற்கு இடம் தராதவையாக மதங்கள் இருக்கின்றன பெண்கள் சுதந்திரம் பெறுவதற்கு அருகதை அற்றவர்கள் என்று மதம் கூறுகிறது. எனவே அவற்றை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறார். எனவே பெரியார் இயக்கங்கள் தொடர்ந்து மூடநம்பிக்கை ஒழிப்பு, பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டும்.*

***(கழக பொதுச்செயலாளர் உரை அடுத்த இதழில் விரிவாக வெளிவரும்)....***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 30, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran